அவசரக் கூட்டம்

கூட்ட எண் – 06 / 2019

திருத்தணி நகராட்சி,
நாள்: 07.03.2019

நிகழும் ஸ்ரீ விளம்பி ஆண்டு, மாசி – 23, திருவள்ளுவர் ஆண்டு 2050 நாள் 07.03.2019 வியாழக் கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு திருத்தணி நகராட்சி அலுவலகத்தில் அவசரக் கூட்டத்தில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்.

தனி அலுவலர் (ம) ஆணையர்
திருத்தணி நகராட்சி.

**பொருள் எண்– 1**

அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.43 பகுதி III பிரிவு 1 (a) நாள்.04.02.2019 ன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சிகளில் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019–ல் ஆணை வெளியிடப்பட்டதின் தொடர்ச்சியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை – 28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.31159/2018/டிபி3, நாள்.05.03.2019ல் உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து "தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் – 2019" மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.505/2019/எப்1)

**பொருள் எண்– 2**

திருத்தணி நகராட்சியில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் கட்டிட உரிமம், மனைப்பிரிவு ஒப்புதல் போன்றவற்றிற்கான கட்டணங்கள் நகர மன்ற தீர்மானம் எண்.173, நாள்.31.07.2017–ல் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவை 01.10.2017 முதல் நடைமுறையில் வசூல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி1) துறை நாள்.04.02.2019 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.43 பகுதி III பிரிவு 1(a) நாள்.04.02.2019–ன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சிகளிலும் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த உத்திரவிற்கிணங்க, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.31159/2018/டிபி3, நாள்.05.03.2019–ல் உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்குவது குறித்து நடைமுறைகள் கடைபிடிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும்

கட்டிட விதிகள் 2019–ன் விதி எண்.14–ல் கட்டிட அனுமதி காலம் தற்போது நடைமுறையில் உள்ள 3 ஆண்டு காலத்தை ஐந்தாண்டுகள் எனவும் மற்றும் ஒருமுறை கால நீடிப்பு காலம், மூன்று ஆண்டுகள் எனவும் அனுமதி வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆகவே, கட்டிட அனுமதி கட்டணத்தை ஐந்தாண்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கேற்பவும், கால நீடிப்பு காலத்தை மூன்று ஆண்டுகளுக்கு வழங்குவதற்கேற்பவும், மன்ற ஒப்புதலுடன் மாற்றி அமைத்து விதிகளின்படி, கட்டண விகிதங்களை பிரசுரம் செய்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளதற்கிணங்க தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 321(2), 328 மற்றும் 329–ன்படி கீழ்கண்டுள்ளவாறு திருத்தப்பட்ட கட்டிட உரிமம் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்களை 01.04.2019 முதல் நடைமுறைப்படுத்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**திருத்தியமைக்கப்பட்ட கட்டட உரிமம் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களின் விவரம்**

| வ. எண். | நகராட்சி சட்டப் பிரிவு | விவரம் | அளவு | கால அளவு | தற்போது வசூலிக்கப்படும் கட்டணம் | | | கால அளவு | உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டணம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | குடியிருப்பு | வணிகம் | தொழிற்சாலை | | குடியிருப்பு | வணிகம் | தொழிற்சாலை |
| 1 | 175 | மனைஉட்பிரிவு அனுமதி கட்டணம் 2 மனைகள் வரை | ஒரு முறை மட்டும் | ஒரு முறை மட்டும் | – | – | – | – | 3000 | – | – |
| | 176 | காலியிடத்தை தெருக்களாக அங்கீகாரம் செய்ய கட்டணம் (Layout Fees) | ஒரு ஏக்கர் அதன் பாகத்திற்கு | ஒரு முறை மட்டும் | 7500 | 12500 | 17500 | ஒரு முறை மட்டும் | 10000 | 15000 | 20000 |
| 2 | 183 (2) | கோவில்கள் எதிரிலும், திருவிழா காலங்களிலும் தெருவில் பந்தல் போட்டுக்கொள்ள | திருவிழா நடக்கும் காலம் வரை | - | இலவசம் | | | - | இலவசம் | | |
| 3 | 183 (2) | கோடை க்கால பந்தல்கள் நகராட்சி தெருவில் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் போட்டுக்கொள்ள | 1 ச.மீ அதன் பாகத்திற்கு | மூன்று திங்கள் (ஏப்ரல்,மே, ஜுன் மாதம் மட்டும்) | 75.00 | | | மூன்று திங்கள் (ஏப்ரல், மே,ஜுன் மாதம் மட்டும்) | 100.00 | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 183 (2) | சாலை ஓரங்களில் பங்குகள் வைத்துக்கொள்ள | 3 ச.மீ அதன் பாகத்திற்கு | ஒரு ஆண்டிற்கு | 1500.00 | | | ஒரு ஆண்டிற்கு | 2000.00 | | |
| 5 | 186 | தெருக்களில் போக்குவரத்திற்கு இடையூறு இன்றி கட்டட சாமான்கள் சேகரித்து வைக்க | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | - | கட்டிட உரிமம் கட்டணத்தில் 30 சதவீதம் வசூல் செய்யப்படும் | | | ஒரு முறை மட்டும் | 1500 | **6000** | **9000** |
| 6 | 186 | தெருக்களில் போக்குவரத்து இடைஞ்சலின்றி கட்டட சாமான்கள் தவிர இதர சாமான்கள் சேகரித்து வைக்க | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | பத்து நாட்களுக்கு மட்டும் | 1000.00 | | | பத்து நாட்களுக்கு மட்டும் | 1500.00 | | |
| **7** | **197 199** | **குடிசை அல்லாத ஒரு கட்டடத்தை கட்ட அல்லது புதுப்பித்து கட்ட, கூடுதல் கட்டடம் கட்ட அனுமதி அளித்தல்** | | | | | | | | | |
| | | 1. ஒட்டுக்கூரை, தகரக்கூரை,சிமெண்ட் சீட் கூரை மற்றும் லைட்ரூப் அமைக்க | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | மூன்று ஆண்டுகளுக்கு | 45 | 90 | 260 | ஐந்து ஆண்டுகளுக்கு | 75 | 150 | 450 |
| | | 2. ஆர்.சி.சி மற்றும் தட்டோடு தரைதளம் மற்றும் தரை கீழ்தளம் (Basement Floor) அமைக்க | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | மூன்று ஆண்டுகளுக்கு | 70 | 140 | 530 | ஐந்து ஆண்டுகளுக்கு | 120 | 240 | 890 |
| | | 3. முதல் தளம் கட்டடம் கட்ட | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | மூன்று ஆண்டுகளுக்கு | 90 | 160 | 550 | ஐந்து ஆண்டுகளுக்கு | 150 | 270 | 920 |
| | | 4. இரண்டாம் தளம் கட்டடம் கட்ட | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | மூன்று ஆண்டுகளுக்கு | 110 | 180 | 570 | ஐந்து ஆண்டுகளுக்கு | 190 | 300 | 950 |
| | | 5.மூன்றாம் தளம் மற்றும் அதற்கு மேலும் தளம் கட்டடம் கட்ட | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | மூன்று ஆண்டுகளுக்கு | 130 | 200 | 590 | ஐந்து ஆண்டுகளுக்கு | 220 | 340 | 990 |
| | | 6. கழிவறை கட்ட | ஒன்றுக்கு | மூன்று ஆண்டுகளுக்கு | 300 | | | ஐந்து ஆண்டுகளுக்கு | 500 | | |
| | | 7. நச்சு தொட்டி கட்ட | ஒன்றுக்கு | மூன்று ஆண்டுகளுக்கு | 300 | | | ஐந்து ஆண்டுகளுக்கு | 500 | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8. சுவர் அல்லது வேலி முதலியவை அமைத்தல் 2.4 மீட்டர் உயரம் மேற்படாமல் | 100 அடி நீளத்திற்கு | மூன்று ஆண்டுக ளுக்கு | 50 | 80 | 220 | ஐந்து ஆண்டுகளுக்கு | 300 | 600 | 900 |
| | | 9. கிணறு அல்லது ஆழ்துறை கிணறு அமைக்க | ஒன்றுக்கு | மூன்று ஆண்டுக ளுக்கு | | 300 | | ஐந்து ஆண்டுகளுக்கு | | 500 | |
| | | 10. இட ஆய்வு கட்டணம் | ஒரு முறை மட்டும் | ஒரு முறை மட்டும் | 300 | 550 | 800 | | 500 | 1000 | 1500 |
| | | 11. குடியிருப்பு வீடு கட்ட / மனை அங்கீகரிக்க | 500 ச மீ அதன் பாகத்திற்கு | ஒரு மனைக்கு ஒருமுறை மட்டும் | 200 | – | - | ஒரு மனைக்கு ஒருமுறை மட்டும் | 500 | - | - |
| | | 12.குடியிருப்பு அல்லாத கட்டுமானம் கட்ட மனை அங்கீகாரம் (வணிகம் / குடோன்) | 200 ச மீ அதன் பாகத்திற்கு | ஒரு மனைக்கு ஒருமுறை மட்டும் | - | 500 | - | ஒரு மனைக்கு ஒருமுறை மட்டும் | - | 750 | - |
| | | 13. இதர கட்டட மனைகள் அங்கீகரிக்க (கல்வி,தொழிற் சாலை, மருத்துவமனை, கல்யாண மண்டபம் கட்ட) | 200 ச மீ அதன் பாகத்திற்கு | ஒரு மனைக்கு ஒருமுறை மட்டும் | - | - | 700 | ஒரு மனைக்கு ஒருமுறை மட்டும் | - | - | 1000 |
| | | 14.மனைப்பிரிவு வரைப்பட நகல் | ஒன்றுக்கு | ஒரு முறை மட்டும் | | 500 | | ஒரு முறை மட்டும் | | 500 | |
| | | 15.கட்டட வரைப்பட நகல் வழங்க | ஒன்றுக்கு | ஒரு முறை மட்டும் | | 150 | | ஒரு முறை மட்டும் | | 200 | |
| | | 16.மாடிப்படி | | மூன்று ஆண்டுக ளுக்கு | | 100 | | ஐந்து ஆண்டுகளுக்கு | | 200 | |
| | | 17. மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி | ஒன்றுக்கு | மூன்று ஆண்டுக ளுக்கு | | 100 | | ஐந்து ஆண்டுகளுக்கு | | 200 | |
| | | 18.கட்டட அனுமதி விண்ணப்பம் | ஒன்றுக்கு | மூன்று ஆண்டுக ளுக்கு | | 150 | | ஐந்து ஆண்டுகளுக்கு | | 150 | |
| | | 19.நகர வரைப்பட நகல் வழங்க | ஒன்றுக்கு | – | | 500 | | - | | 500 | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 20.நகராட்சியால் வழங்கப்படும் சான்று ஒன்றுக்கு கட்டணம் | நகல் ஒன்றுக்கு | – | - | | | - | 1000 | |
| | | 21.பழைய கட்டடம் இடிப்பு கட்டணம் | - | - | - | - | - | ஒரு முறை மட்டும் | ரூ.3/- ஒரு சதுர அடிக்கு | |
| | | 22. சாலை அபிவிருத்தி கட்டணம் | 1 சதுர மீட்டருக்கு | - | சாலை அபிவிருத்தி கட்டணம் நகர் மன்ற பொறியாளரின் மதிப்பீட்டு அடிப்படையில் வசூலிக்கப்படவேண்டும். | | | ஒரு முறை மட்டும் | 200 | 350 | 450 |
| 8 | **ஆய்வுக் கட்டணம் (தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 விதி எண்.7** | | | | | | | | | |
| | | கட்டிட வரைப்படம் சமர்பிக்கும்போது | சதுர மீட்டருக்கு | | | | | | 2.00 | |
| | | முதல் திருத்திய கட்டிட வரைப்படம் சமர்பிக்கும்போது | சதுர மீட்டருக்கு | | | | | | 1.00 | |
| | | இரண்டாம் திருத்திய கட்டிட வரைப்படம் சமர்பிக்கும்போது | சதுர மீட்டருக்கு | | | | | | 0.40 | |
| | | மூன்றாம் திருத்திய கட்டிட வரைப்படம் சமர்பிக்கும்போது | சதுர மீட்டருக்கு | | | | | | 0.20 | |
| | | அடுத்தடுத்து சமர்பிக்கும் திருத்திய கட்டிட வரைப்படங்களுக்கு | சதுர மீட்டருக்கு | | | | | | – | |
| 9 | **நகராட்சி வரைப்பட வரைவாளராக உரிமம் வழங்க** | | | | | | | | | |
| | | 1.பதிவுக் கட்டணம் | ஒரு முறை மட்டும் | ஒரு முறை மட்டும் | - | ஒரு முறை மட்டும் | 5000 | | | |
| | | 2.வைப்புத் தொகை | ஒரு முறை மட்டும் | ஒரு முறை மட்டும் | 2500 | ஒரு முறை மட்டும் | 5000 | | | |
| | | 3. உரிமம் கட்டணம் | ஒரு முறை மட்டும் | நிதி ஆண்டு | 1000 | நிதி ஆண்டு | 2000 | | | |
| | | 3. உரிமம் புதுபித்தல் | ஒரு முறை மட்டும் | ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். தவறினால் உரிமம் புதுப்பித்தல் கட்டணத்துடன் 50 சதவீதம் கூடுதலாக சேர்த்து செலுத்தப்பட வேண்டும். | 1000 | ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். தவறினால் உரிமம் புதுப்பித்தல் கட்டணத்துடன் 50 சதவீதம் கூடுதலாக சேர்த்து மே 31-க்குள் செலுத்தப்பட வேண்டும். | 2000 | | | |

10. அனுமதியின்றி கட்டட பணி துவங்கப்பட்டிருப்பின் கட்டட உரிமம் கட்டணத்தில் கூடுதலாக 50 சதவீதம் வசூலிக்கப்படும்.

11. ஒரு குடியிருப்புக்கு மேல் கட்டப்படும் கட்டடங்களுக்கு கூடுதலாக கட்டப்படும் ஒவ்வொரு சமையலறைக்கும் ரூ.500 /- என்ற விகிதத்தில் சேவை கட்டணம் வசூலிக்க வேண்டும்.

12. மழைநீர் சேகரிப்பு திட்டத்திற்கு வைப்புத் தொகை ரூ.2500/- வசூல் செய்யப்பட வேண்டும். மழைநீர் சேமிப்பு அமைப்பு கட்டியபின் மனுதாரர் உரிய புகைப்படம் ஆதாரத்துடன் இணைத்து மனு செய்யும் பட்சத்தில் தல ஆய்வு செய்து இந்த தொகைதிரும்ப வழங்கப்படும்.

13. அனுமதி காலம் முடியும் முன்பாக 30 நாட்களுக்கு முன்பு கால நீடிப்பு அனுமதி கோரும் மனுவிற்கு தற்போது வசூலிக்கப்படும் கட்டணங்களின்படி, கட்டணங்கள் முழுவதும் செலுத்திய பின்னர் ஒருமுறை மட்டுமே 3 ஆண்டுகளுக்கு கால நீடிப்பு அனுமதி வழங்கப்படும்.

**அலுவலக குறிப்பு :-**

1. திருத்திய கட்டணங்களை 01.04.2019 முதல் வசூல் செய்ய மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினங்களை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண்.1131/2017/எப்1)

## பொருள் எண்– 3

தீனதயாள் அந்தியோதயா யோஜனா, தேசிய நகர்புற வாழ்வாதார திட்டம், DAY-NULM SUH-5th PSC for 2018-19–ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ் கண்ட பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | திருத்தணி நகராட்சி எல்லைக்குட்பட்ட திருத்தணி அரசு பொது மருத்துவமனை வளாகத்தினுள் உட்புறநோயாளிகளின் உதவியாளர்கள் தங்க சிறப்பு தங்குமிடம் (Special Shelter) கட்டிடம் கட்டும் பணி. | 100.00 |
| 2 | திருத்தணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வீடற்றவர்களுக்கு தங்கும் விடுதி (Homeless Shelter) கட்டிடம் கட்டும் பணி. | 70.00 |

மேற்கண்ட பணிகளுக்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை –28 அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.2829/2016/DO1 நாள்.28.02.2019–ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட தொழில்நுட்ப அனுமதிக்கிணங்க மேற்கண்ட பணிகளுக்கு வடிவமைப்பு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வடிவமைப்பு செய்யும் அரசு கல்லூரிக்கு செலுத்த வேண்டிய வடிவமைப்பு கட்டணத்தினை செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1761/2016/இ1)

**பொருள் எண்– 4**

இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிக்கு 07.03.2019 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்த புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு புதிய கணிணிகள் மற்றும் பிரிண்டர்கள் சப்ளை செய்யும் பணி. | 7.00 | 1.Incom Solutions, Chennai – 33 ஒப்பந்ததாரர் 0.10% மதிப்பீட்டை விட குறைவு<br>2.SRT Data Solutions, Chennai–45, ஒப்பந்ததாரர்,0.55% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

1. மேற்படி பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்த நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.363/2018/இ1)

**பொருள் எண்– 5**

முதன்மை தேர்தல் அதிகாரி (CEO) தலைமை செயலகம், சென்னை அவர்களின் கடித எண்.4796/Ele VII/2018-19 நாள்.25.02.2019-ன்படி பாராளுமன்ற தேர்தல் 2019 தொடர்பாக 18.04.2019 அன்று வாக்கு பதிவு நடைபெறவுள்ளது. மேற்படி பாராளுமன்ற தேர்தல் வாக்குப்பதிவு 100 சதவீதம் பதிவு செய்வதற்கு பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்டுத்தும் வண்ணம் Sveep Awareness செய்வதற்கு உண்டாகும் தோராய செலவு ரூ1.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். 2152 /2018/சி1)**

**பொருள் எண்– 6**

தமிழக அரசின் அரசாணை (நிலை) எண்.84, அரசு சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை நாள். 25.06.2018, சுற்றுச்சூல் பாதுகாப்புச் சட்டம் 1986 ( சட்ட எண். 29/1986)–ல் பிரிவுகள் 3,6 மற்றும் 25 ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920–ம் ஆண்டு பிரிவு 306–ன் படியும், 2019–ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சி (இரண்டாவது திருத்தம்) சட்டங்கள் (2019 ஆம் ஆண்டின் 12–வது தமிழ் நாடு சட்டம்), நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அலுவலக கடிதம் ந.க.எண். 44555/2013/P3, நாள். 28.02.2019 ஆகியவற்றின் கீழ் இந்நகராட்சிப் எல்லைக்குட்பட்ட பகுதியில் ஒரு முறையே பயன்படுத்தி தூக்கி வீசப்படக்கூடிய நெகிழி பொருட்களை (Plastic) சேர்த்து வைத்தல், விநியோகித்தல், கொண்டு

செல்லுதல், விற்பனை செய்தல் மற்றும் பயன்படுத்துதல் முதலியன தடைசெய்யப்பட்டு அபராத தொகை விதிக்கப்படுவதற்கு இந்நகராட்சியில் ஏற்கனவே திருவள்ளூர் மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள ந.க.எண். 735/2016/எச்1, நாள். 01.12.2017 –ந் தேதிய பிளாஸ்க் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 குறித்த அறிவிப்பில் கீழ்கண்டவாறு திருத்தம் செய்து துணை விதிகள் ஏற்படுத்தலாம்.

1. **செயலாக்க அதிகாரி:** நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவார்.
2. **ஆய்வு நடத்தும் அதிகாரி:** ஆய்வு நடத்தும் அதிகாரி எனபப்படுபவர் நகராட்சி பகுதிகளில் துப்புரவு பணி மேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர், நகரமைப்பு ஆய்வர், வருவாய் ஆய்வர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர்.
3. **மேல்முறையீட்டு அலுவலர்:** இந்த துணைவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையாளரே ஆவார்.
4. **தண்டனைகள் விதிக்கும் முறைகள்:** மேற்படி துணை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், தடை செய்யப்பட்ட நெகிழிப்பொருட்களை பறிமுதல் செய்தல், அபாய மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமத்தினை ரத்து செய்தல் (D&O) முதலியனதண்டனை முறைகள் மற்றும் சட்டப்படியான நடவடிக்கைகள்.
5. **வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு:**
   1. மொத்த சேமிப்பாளர் /விநியோகிப்பாளர்.

      அ) 1 ச.அடி முதல் 500 ச. அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
      ஆ) 501 ச.அடி முதல் 1000 ச. அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
      இ) 1001 ச.அடி முதல் 1500 ச. அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
      ஈ) 1501 ச.அடி முதல் 2000 ச. அடி பரப்பளவு கொண்ட கட்டிடம்
      உ) 2000–ம் ச.அடிக்கு மேல் பரப்பளவு கொண்ட கட்டிடத்திற்கு.

   2. **வணிகவளாகங்கள்:**

      அ) பெரிய மற்றும் சிறியது துணிக்கடைகள்.
      ஆ) பல்பொருள் அங்காடிகள் பெரியது.
      இ) திரையரங்குகள்
      ஈ) அரசு மதுபானக்கடை, மதுபானவிற்பனைக் கூடங்கள் ( BARS) மன மகிழ்மன்றம் முதலான இதர இனங்கள்.
      உ) கல்வி நிறுவனவளாகங்கள்.
      ஊ)அரசு, அரசு சார்பு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்களின் வளாகங்கள் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் அலுவலக வளாகங்கள்.
      எ) திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள் முதலானவை.
      ஏ) பெரிய, நடுதர மற்றும் சிறிய தொழிற்சாலைகள்.

3. மளிகைக் கடைகள், காய்கறிக்கடைகள், பழக்கடைகள், மருந்துக்கடைகள், உணவகங்கள், பழச்சாறு விற்பனைக் கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள்

4. சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோர கடைக்காரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள்.

மேற்கண்ட சிறிய, பெரிய, நடுத்தர வியாபாரம், வணிக நிறுவனங்கள் மற்றும் சேவை நோக்கில் செயல்படும் நிறுவனங்களில் ஒருமுறையே பயன்படுத்தி தூக்கி வீசக்கூடிய தடைசெய்யப்பட்ட நெகிழி பொருட்களை எடை அளவு கோலின்படி பயன்படுத்தும் மற்றும் விநியோகம் செய்யும் நிறுவனங்களுக்கு விதிக்கப்படும் பணத்தண்டம் விவரம்.

| வ.எண். | குற்றங்கள் | கைப்பற்றும் நெகிழியின் எடை அளவு ( கிலோ கிராமில்) | விதிக்கப்படும் அபராத தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | ஒருமுறையே பயன்படுத்தி தூக்கி வீசக் கூடிய நெகிழி இனங்களை பொது மக்கள் பயன்படுத்துதல் மற்றும் கொள்முதல் செய்தல் | குறைந்த எடை அளவு | ரூ.100/– |
| 2 | ஒருமுறையே பயன்படுத்தி தூக்கி வீசக் கூடிய நெகிழி இனங்களை பயன்படுத்துதல், சேமித்தல் மற்றும் விநியோகித்தல் | 100 கிலோ கிராம் வரை | ரூ.2,000/– |
| 3 | ஒருமுறையே பயன்படுத்தி தூக்கி வீசக் கூடிய நெகிழி இனங்களை பயன்படுத்துதல், சேமித்தல் மற்றும் விநியோகித்தல் | 101 முதல் 500 வரை | ரூ.5,000/– |
| 4 | ஒருமுறையே பயன்படுத்தி தூக்கி வீசக் கூடிய நெகிழி இனங்களை பயன்படுத்துதல், சேமித்தல் மற்றும் விநியோகித்தல் | 501 முதல் 1000 வரை | ரூ.10,000/– |
| 5 | ஒருமுறையே பயன்படுத்தி தூக்கி வீசக் கூடிய நெகிழி இனங்களை பயன்படுத்துதல், சேமித்தல் மற்றும் விநியோகித்தல் | 1001 கிலோ கிராம் எடை அளவுக்கு மேல் | ரூ.20,000/– |
| 6 | மதுபான கூடங்களில் ஒருமுறையே பயன்படுத்தி தூக்கி வீசக் கூடிய நெகிழி இனங்களை பயன்படுத்துதல், சேமித்தல் மற்றும் விநியோகித்தல் | | |
| | (அ) முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | – | ரூ.10,000/– |
| | (ஆ) இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | – | ரூ.20,000/– |

## II தண்டனைகள் விவரம்

அரசாணை (Ms) எண்.84, தமிழ் நாடு அறிவிப்பு நாள். 25.06.2018 தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட பிரிவு 306 ( 28–A) –ன் படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்.

| வ. எண் | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1 | ஒரு முறையே பயன்படுத்தக் கூடிய மற்றும் தூக்கி வீசப்படக் கூடிய நெகிழிப் பொருட்களை சேமித்தல், (Godown) விநியோகித்தல், கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ரூ.25,000/– | ரூ.50,000/– | ரூ.1,00,000/– |
| 2 | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் ஒரு முறையே பயன்படுத்தி தூக்கி வீசப்படக்கூடிய நெகிழிப்பொருட்களை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.10,000/– | ரூ.15,000/– | ரூ.25,000/– |
| 3 | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் ஒரு முறையே பயன்படுத்தி தூக்கி வீசப்படக்கூடிய நெகிழிப்பொருட்களை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.1000/– | ரூ.2000/– | ரூ.5000/– |
| 4 | சிறிய வணிக விற்பனையாளர்களால் ஒரு முறையே பயன்படுத்தி தூக்கி வீசப்படக்கூடிய நெகிழிப் பொருட்களை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.100/– | ரூ.200/– | ரூ.500/– |

**அலுவலக குறிப்பு:-**

பொது சுகாதார நலன் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், மேற்காணும் தமிழக அரசால் தடை செய்யப்பட்டுள்ள ஒருமுறையே பயன்படுத்தி தூக்கி வீசப்படும் நெகிழி இங்களை இந்நகராட்சி பகுதிகளில் பயன்படுத்துதல், விநியோகித்தல், சேமித்தல், விற்பனை பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்யவும் மேற்படி தடையினை மீறும் தனி நபர், நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மீது தகுந்த அபராத தொகை விதிக்கவும் வசூலிக்கவும் மேலும் சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளவும்

இந்நகராட்சியில் ஏற்கனவே திருத்தணி மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 குறித்த அறிவிப்பில் ( ந.க.எண். 735/2016/எச்1, நாள். 01.12.2017) திருத்தம் செய்து துணை விதிகள் ஏற்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 1100/ 2018/எச்1)

**பொருள் எண்– 7**

இந்நகராட்சியின் மூலம் நடைபெறும் பணிகளுக்கு 2019–20–ஆம் ஆண்டுகளுக்கு புதியதாக மின் இணைப்பு பெறவும் அதற்காக தமிழ்நாடு மின்சார வாரியம் தெரிவிக்கும் தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : –**

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.363/2018/இ1)

**பொருள் எண்– 8**

இந்நகராட்சி வளர்ச்சி பணிகளுக்காக நடைபெறும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகளை மாநில மற்றும் மாவட்ட அளவில் விளம்பரம் செய்யவும், அவ்வாறு செய்யப்டும் விளம்பரத்திற்கான கட்டணம் 2019–20–ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ள ஆகும் தோராய மதிப்பீட்டு தொகை ரூ.4.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.363/2018/இ1)

**பொருள் எண்– 9**

நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 5, அவர்களின் கடிதம் ந.க.எண்.16140/2017/எல்ஏ2, நாள்.25.07.2017–ல் 2017–18 ஆண்டிற்கான சட்டப்பேரவை அறிவிப்பு எண் 12–ன்படி நகராட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்களுக்கு நகராட்சி பங்களிப்புடன் "சிறப்பு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்" செயல்படுத்திட அறிவிப்பு வெளியிடப்பட்டது, மேற்படி அறிவிப்பின்படி இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்களுக்கு நகராட்சி பங்களிப்புடன் கூடிய "சிறப்பு ஆயுள் காப்பீட்டுத் திட்டம்" செயல்படுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1543/2018/சி1)

**பொருள் எண்– 10**

இந்நகராட்சி பொது சுகாதாரம் திடக்கழிவு மேலாண்மை திட்ட விதிகள் 2016–ன் உட்கூறு 15–ல் வலியுறுத்தியவாறும், திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகளை மேம்படுத்திட தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் உத்தரவுப்படி மாநில கண்காணிப்பு குழு வலியுறுத்தியவாறும், திடக்கழிவு மேலாண்மை திட்ட கொள்கை மற்றும் செயல் திட்ட வரைவினை இந்நகராட்சியில் நடைமுறைப்படுத்திடவும், அதனை மாவட்ட அரசிதழில் வெளியிடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.1100/2018/எச்1 )

**பொருள் எண்– 11**

இந்நகராட்சிக்கு எதிராக நீதிமன்றங்களில் தொடரப்படும் மற்றும் தொடரப்பட்ட வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக வழக்குகளில் ஆஜராகுவும் வழக்கறிஞர் கட்டணம் வழக்கு கட்டணம் மற்றும் கருத்துருக்கள் பெற ஆகும் கட்டணத்தினை 2019–20 ஆம் ஆண்டு செலுத்த ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.3.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. செலவினத்தை அனுமதிக்கலாம்.
2. அரசு நிர்ணயத்துள்ள விதிகளின் படி கட்டணத்தினை செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 2420/2016/அ1)

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி.**